நேற்று மாலை நிறுவனத்தில் நடந்த 'ப்ராஜெக்ட் மீட்டிங்கில்' முதலாளியிடமிருந்து

கொஞ்சம் கூடுதலாகவே கோபமான வார்த்தைகளை வாங்கிக் கட்டிக்கொண்டதால்

ஏற்பட்ட எரிச்சலில் நேற்றிரவு சரிவரத் தூங்க முடியவில்லை ராஜாவால். தன்மீது

தவறில்லை என்பதை நிரூபிக்கக்கூட வாய்ப்புக் கிடைக்காததால் மனச் சஞ்ச லத்துடன்

நள்ளிரவு தாண்டியே தூங்க முடிந்தது.

உடல் அசதியும் மன அசதியும் சேர்ந்து கொடுத்த அழுத்தத்தில் வழக்கத்தைவிடவும்

அரைமணி நேரத் தாமதமாகவே எழ முடிந்தது; அவசரக் குளியலோடு காலைக்

கடன்களைஎல்லாம் முடித்துவிட்டு ஹாலுக்கு வந்தபோது மனைவி அனிதா தயாராக

வைத்திருந்த பூப்போன்ற இட்லியும் மல்லி மணக்கும் சட்டினியும்கூட நாவுக்கு ச் சுவை

தராமல் அரக்கப் பரக்கத் தொண்டைக்குள் இறங்கியது.

சாப்பிடும்போதுகூட இன்றைக்கு எப்படியும் நேற்றைக்கு அலுவலகத்தில் நடந்த

தவறுக்கு தான் எந்த விதத்திலும் காரணமல்ல என்பதை முதலாளியிடம் புரிந்து

கொள்ளச் செய்துவிட வேண்டும் என மனம் மறுபடியும் மறுபடியும் நினைவூட்டியது.

பசியாறி முடிப்பதற்குள் மகள் ப்ரீத்தி 'ஹாய் அப்பா' என்றபடி பள்ளிக்குத் தயாராகக்

கிளம்பி வந்து நின்றாள். மனைவி அனிதா
வேலைக்குக் கிளம்ப ஒன்பது மணியாகும்

என்பதால் வழக்கம் போல் ப்ரீத்தியைப் பள்ளிக்குத் தயார்ப்படுத்தி இருந்தார்.

தும்பைப்பூப் போன்ற வெள்ளை உடையில் 'போகலாமாப்பா' என்றபடி மலர்க்

கொத்தாய்ச்
சிரித்த மகளை வேறொரு நாளாக இருந்திருந்தால் கொஞ்ச நேரமாவது

கொஞ்சிப் பேசிவிட்டுத்தான் கிளம்பி இருப்பார்; இன்று இருக்கிற மன
இறுக்கத்தால்

'ஒகே' என்ற ஒற்றை வார்த்தையோடு எழுந்து கொண்டார்.

'நாங்க கிளம்புறோம் அனிதா' என்று
சமையலறை நோக்கி குரல் கொடுத்தபடியே

ப்ரீத்தியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு கதவைத் திறந்தார். 'இதோ

வந்திட்டேங்க' என்ற குரலோடு வாசலுக்கு வந்த அனிதாவைப் பார்த்து ப்ரீத்தி

கையாட்டியபடி 'பை அம்மா' என்று சொல்ல அனிதாவும் அருகே வந்து
நெற்றியில்

முத்தமிட்டார்.

நேரமின்மையும் மன உளைச்சலும் தந்த எரிச்சலில்
கதவை வேகமாகவே சார்த்தி

விட்டு வெளியே வந்தார். 'ப்பா கையை மெதுவாப் பிடிங்க' என்ற
மகளைப் பார்த்து

'என் அவசரம் எனக்கு'
என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டபடியே மின்தூக்கிப்

பொத்தானை அழுத்தினார்.

சில நிமிட
இடைவெளியில் கதவு திறந்த மின்தூக்கிக்குள் நுழைந்த ராஜா கொஞ்சம்

முகத்தைச் சுளித்தபடி நின்று கொண்டார். உள்ளே சிமெண்ட் கறைகளோடும்
தள்ளு

வண்டியோடும் கசங்கிச் சுருங்கிய சட்டையணிந்துதலைக்கவசத்தொடு நின்று

கொண்டிருந்தார் ஓர் கட்டுமான ஊழியர்.
ராஜாவைக் கண்டதும் ஏதோ ஒருவித

ஐயத்தோடு அவருக்கு
வலக்கையைத் தூக்கி வணக்கம் சொன்னார் அந்த ஊழியர்.

பளபளக்கும் மகள் ப்ரீத்தியின் பள்ளிச் சீருடை மீது சிமெண்ட் கறைபட்டுவிடுமோ

என்ற கவலையோடும் ஏற்கனவே இருந்த மனஉளைச்சலோடும் முகத்தைச்

சுளித்தபடி பதில் வணக்கத்தைக் கடனுக்குச் சொல்லிவிட்டு மகளைத் தன்னருகில்

அணைத்துக்கொண்டு முகத்தைத் திருப்பி நின்று கொண்டார்.

அந்த ஊழியரும் 'இத்தனை அழுக்கோடு இருக்கும் நாம் இவருக்குப்போய்

வணக்கம் சொல்லி இருக்கக்கூடாதோ' என்று
நினைத்தவரைப்போல் அவரும் மின்

தூக்கிக் கதவைப் பார்த்தபடி நின்றுகொண்டார். கொஞ்ச நேரம் அந்த ஊழியரது முகம்

இறுகிப் போயிருந்ததை ராஜா
உணர்வதற்குள் முதல் தளத்தை அடைந்திருந்தார்கள்.

திரும்பித் திரும்பி அந்த ஊழியரைப் பார்த்தபடியே வந்த ப்ரீத்தா வெளியேறும்

போது 'பை அங்கிள்' என்று புன்னகைத்தபடி அவரைப் பார்த்துச் சொல்லிவிட்டு

வெளியேறினாள். அவர்கள் வெளியேறும் வரை கதவு மூடிவிடாமல் இருக்க

பொத்தானை அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தவர் பதிலுக்கு புன்னகைத்தபடி 'பைபை'

என்று கையாட்டிச் சிரித்தார்.

பக்கத்திலிருந்த பள்ளியில் மகள் ப்ரீத்தியை விட்டுவிட்டு வேகவேகமாக பேருந்து எடுத்து அலுவலகம் வந்து சேரவும் மணி எட்டரை ஆகவும் சரியாக இருந்தது. நேற்றைய மீட்டிங்கால் பாக்கிப்பட்டிருந்த வேலைகள் நிறைய இருந்ததால் அவ்வேலைகளில் முழுமையாக மூழ்கிப்போனார்.

பிற்பகலில் ராஜாவின் அறைக்கு வந்த முதலாளி "சாரி ராஜா, எஸ்டெர்டே ஐ மிஸ் அண்டர்ஸ்டேன்ட் யூ, லேட்டர் ஐ சீ யூ வா " என்று சிங்கிலீஷில் சொன்ன வார்த்தைகள் நேற்றிலிருந்து ஏற்பட்டிருந்த மனச்சுமைகளைக் கொஞ்சம் குறைத்தன.

அந்த உற்சாகம் தந்த தெம்போடு ஒரு புதிய ப்ராஜெக்ட் தொடர்பாக இருந்த பல வேலைகளை நேரம் போவதே தெரியாமல் பார்க்கத்தொடங்கினார்.

தன் வேலைகளை முடித்த பக்கத்து இருக்கை நண்பரான மலாய்க்காரர் முகமது 'ஒ.கே சி யு பை' என்று சொன்னபோதுதான் நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தார்,மணி ஆறாகப் போவதை உணர்ந்தார். உடனே மனைவி அனிதாவை தொலைபேசியில் அழைத்து இனிமேல்தான் வேலை முடியப்போவதாகவும் தான் வீடு திரும்ப ஏழு மணியாகிவிடும் என்று சொல்லியவர் தன் கணினிப் பக்கத்தை மூடிவிட்டு ஷட்ஆன் செய்தார்.

அலுவலகத்தைவிட்டுக் கிளம்பி பேருந்து நிலையத்தை அடைந்து சரியாக வந்து நின்ற பேருந்தில் ஏறி வீட்டருகே இறங்கி மின்தூக்கியில் நுழைந்து பொத்தானை

அழுத்தியபோது காலையில் சந்தித்த அந்த ஊழியர் மனதில் வந்து போனார்.

'அடடா, நாம் கொஞ்சம் அந்த இளைஞருக்கு
மரியாதை கொடுத்திருக்கலாம்.

வலிய வந்து கொடுத்த மரியாதைக்குக்கூட பதில் மரியாதை
செய்யாமல் அப்போது

இருந்த மனச்சுமைகளால் அலட்சியப்படுத்திவிட்டோமோ என்ற உறுத்தலோ
டு

சுற்றுமுற்றும் பார்த்தார்- காலையில் அந்த இளைஞரை சரிவரக்கூடப் பார்க்கா-

ததால் முகம் நினைவில் வரவில்லை என்றாலும் காட்டுமானத்தள ஊழியர்
யாரும்

தென்படவே வில்லை.

"சரி நாளையோ மறுநாளோ அப்படிப்பட்ட ஊழியர்
யாரையாவது பார்த்தாலும்

வலியச் சென்று பேசியாவது ஒரு 'சாரி' சொல்லி விடவேண்டும்" என்று
தனக்குள்

நினைத்துக்கொண்ட ராஜா 15 ஆண்டுகளுக்கு முன் தான் சிங்கப்பூருக்கு முதல்

முதலாக வந்தபோது தான்
பட்ட சிரமங்களை மனதினுள் எண்ணிப் பார்க்கிறார்.

கடினமான வேலை இல்லை என்றாலும் அவர் படித்திருந்த பட்டயத்திற்குத்

தொடர்பில்லாத சைட் சூபர்வைசர் வேலைதான் அவர் பார்த்த முதல் வேலை.

அவருக்குக் கீழே சுமார் 50 ஊழியர்களை வேலை
வாங்குகிற வேலை. இந்தியா,

பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த அந்த ஊழியர்களை அவர்கள் போக்கில்

விட்டுக்கொடுத்து, ஒவ்வொருவரையும் பெயர் நினைவில் வைத்திருந்து

அழைப்பது, அவர்களின் குடும்பம் பற்றி விசாரிப்பது போன்ற அணுக்கமான

அணுகுமுறைகளால்
ஊழியர்களிடமும் முதலாளியிடமும் நல்ல பெயரெடுக்க

முடிந்தது.

அப்போது முதல் இவர்களைப் போன்ற ஊழியர்களைக்கண்டால் அன்போடு

நலம் விசாரிப்பது
என்ற நடைமுறையில் பழகியிருந்த தான் இன்று காலையில்

தனக்கிருந்த மனச்சுமைகளால் ஒரு ஊழியரை அவமதித்துவிட்டோமே என்ற

குற்ற உணர்ச்சியுடன் மின்தூக்கியிலிருந்து வெளியேறினார்.

மறுநாள் முதல் மின்தூக்கியில் போகும்போதும் வரும்போதும் பேருந்துக்கு

நடக்கும்போதும் என அந்த ஊழியரைக்காண
மனம்அலைந்து தேட ஆரம்பித்தது.

தொடர்ச்சியாக அவரைக்காண முடியாததால் அது ஒரு பெரிய உள்மன

உறுத்தலாக மனதைப்போட்டுக் குடைந்துகொண்டே இருந்தது.
ஆனாலும் வேலைச்-

சூழல், குடும்பம், குழந்தை என்ற வட்டத்தில்  வலம் வர வலம் வர

கொஞ்சம் கொஞ்சமாக அந்த சம்பவம் பற்றி மறக்கத் தொடங்கினார்.

சீனப்புத்தாண்டுக்கு முதல் நாளிரவு ராஜாவின் கைத்தொலைபேசி

ஒலிக்க எடுத்து 'ஹலோ'  என்றார். மறு முனையிலிருந்து ஒரு சிறு

தயக்கத்தோடு 'ஹலோ, நடராஜந்தானே நீங்க' என்றது குரல்.

'ஆமாம் நீங்க பேசறது யாருங்க'

"வணக்கங்க...நான் ஊருலேருந்து புதுசா வந்திருக்கேன், தம்பிக்கோட்டை

கீழக்காடு சீதாத்தேவர்  மகன் ஜெயக்குமார் பேசறேன்...உங்க வீட்டிலே உங்க

கிட்ட கொடுக்கச் சொல்லி கொஞ்சம் பொருட்கள் கொடுத்து விட்டிருக்காங்க,

போன வாரம் நான் ஊருலேருந்து வந்தேன்...உங்க அட்ரஸ் கேக்கிறதுக்காக

வந்த மறுநாளே போன் பண்ணுனேன் நீங்க எடுக்கலை,
திரும்ப ஊருக்கு நேத்து

போன் போட்டு அந்த நம்பர் சரிதானான்னு கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டு இப்ப

திரும்பவும் பேசறேன்..." எழுதி வைத்ததைப் படிப்பதைப் போல ஒரே மூச்சில்

சொல்லி முடித்தார் மறு முனையிலிருந்து பேசியவர்.

போன வாரம் ஒருநாள் மீட்டிங்கில் இருந்தபோது வந்த அழைப்பை பிறகு

பேசலாம் என நினைத்து நிறுத்தியதும், பிறகு அந்த
நம்பரைத் தேடியபோது அது

போது தொலைபேசி எண்ணாக இருந்ததால் மறுபடியும் பேசமுடியாமல் போன
தும்

நினைவில் வந்தது.

சிங்கப்பூர் வருவதற்கும் முன் 10
வருடங்கள் சென்னையிலேயே வேலை பார்த்துப்

பழகி இருந்ததால்
கிராமத் தொடர்பு அதிகம் இல்லாத ராஜாவால் உடனடியாக அவர்

சொன்ன சீதாத்தேவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.
என்றாலும் அவர்

உறவுக்காரப் பையன் என்பது மட்டும் தெரிந்தது. ஆகவே, " அனிதா,
சீதாத் தேவர்ங்கிறது

உங்க ஊர்லே யாரு"
என்றார் தொலைபேசியை உள்ளங்கையால் பொத்தியபடி.

"உங்க பெரிய மாமனார் பெயரே தெரியாதா?
எங்க பெரியப்பாதான் அவங்க...ஆமா

போன்ல யாருங்க?" என்றார் அனிதா.

"அப்படின்னா பேசுறது உங்க தம்பி "
என்றபடியே கைத்தொலைபேசியை மனைவி

அனிதாவிடம் கொடுத்தார் ராஜா.

"அக்கா, நான் கீழக்காட்டு குமார் பேசுறேன்..."
என்ற மறுமுனைக் குரலைக் கேட்டதும்

"தம்பி நல்லா இருக்கீங்களா? ஊருலேருந்து எப்ப வந்தீங்க?
வீட்டுல எல்லாரும் நல்லா

இருக்காங்களா?" என்று தொடர் கேள்விகளாக அன்போடு அடுக்கினார்.

"எல்லோரும் நல்லா இருக்காங்க...நான்
வேலைக்கு வந்து ஒரு வாரமாகப்போவுதுக்கா.

வந்த மறுநாளே அத்தான் நம்பருக்குப்
போன்பண்ணினேன்..அவங்க எடுக்காததால

சந்தேகப்பட்டுக்கிட்டு திரும்ப ஊருக்கு போன்
போட்டு நம்பரை சரிபார்த்துக்கிட்டு இப்ப

மறுபடியும் அழைக்கிறேன்..."

"ஒ அப்படியா...சாரி தம்பி....... அத்தான் ஆபீசுல பிசியா இருந்தா நான் போன்

போட்டாக்கூட எடுக்க மாட்டாங்க" என்று ராஜாவைப் பார்த்தபடியே சொன்ன
அனிதா

"சரி தம்பி வேலையெல்லாம் எப்படி பரவாயில்லையா? எங்க
தங்கி இருக்கீங்க?"

என்றார்.

"வேலை
கொஞ்சம் கஷ்டம்தான்க்கா...பரவாஇல்லை...சமாளிச்சிடலாம்...பணம்

கட்டி வந்துட்டோம்ல..." என்ற மறுமுனை பதிலைக் கேட்டதும்
அனிதாவின் மனம்

கொஞ்சம் சஞ்சலப்பட்டது. "டிப்ளமாப்
படிப்பைக்கூட ஒழுங்காப் படிக்காம பொறுப்பே

இல்லாமல் நண்பர்களோடு ஊர்சுற்றிக்கொண்டிருக்கிறான்" என்று
குமாரின் அம்மா

அடிக்கடி புலம்புவதைக் கேட்டுப் பழகிய அனிதாவுக்கு இப்போது குமார் சொன்ன

பதில் வியப்பாக இருந்தது.

".....பணம் கட்டி வந்துட்டோம்ல...சமாளிச்சிடலாம்..." என்ன ஒரு பொறுப்பான பதில்...

சோம்பேறி இளைஞர்களைக்கூட சிங்கப்பூர் எப்படியெல்லாம் மாற்றிப்போட்டு

விடுகிறது என நினைத்தபோது சிங்கப்பூரை போதிமரத்துக்கு ஒப்பீடு செய்து ஒ ரு

கவிஞர் எழுதி இருந்தது நினைவில் வந்து அக்கருத்தை ஆமோதித்தது.

"சரி தம்பி...வேலை எங்கே?... எங்க தங்கி இருக்கீங்க?"

"காக்கி புகிட் ஹாஸ்டல்ல தங்கி இருக்கிறேன்...வேலை அப்பப்ப இடம் மாற்றிக்

கூட்டிட்டுப் போறாங்க..."

"நாளைலேர்ந்து சீனப்பெருநாளாச்சே...எத்தனை நாள் லீவு விட்டிருக்காங்க?...

"ஆமாக்கா...நாளையிலேர்ந்து அஞ்சு நாள் லீவ் விட்டிருக்காங்க..."

"அப்படீன்னா நாளைக்கு வீட்டுக்கு வாங்களேன்..."

"ஆமாக்கா ...நாளைக்கு வீட்டுக்கு வரலாமான்னு கேக்கத்தான் போன் போட்டேன்"

"அப்ப சரி தம்பி, நாளைக்குக் காலையிலேயே கெளம்பி வந்துடுங்க..அத்தான்கிட்ட

போனைக் குடுக்கிறேன்... ஒரு நிமிஷம்.." என்ற அனிதா கைத்தொலைபேசியை

ராஜாவிடம் நீட்டினார்.

"சரி தம்பி...நீங்க இங்க வர்றதுக்கு 23 ஆம் நம்பர் பஸ் எடுத்து வரலாம்.. பிடோக்

ரிசர்வாயர் ரோட்டுல பஸ் எடுத்தீங்கன்னா எங்க
வீட்டுக்கிட்ட இறங்கிக்கிடலாம்..நீங்க

வரும்போது போன் போடுங்க...நான் இறங்குற நிறுத்தத்தை சொல்றேன்..."

"சரி அத்தான்"

மறுநாள் காலையிலேயே சமையலுக்குத்தேவையான
மீன் காய்கறி போன்றவற்றை

வாங்குவதற்காக
தேக்கா ஈரச்சந்தைக்குப் போனபோது சீனப்பெருநாளையொட்டி பல

கடைகள் மூடப்பட்டிருந்ததால் தேடித்தேடி நல்ல மீனாக சுத்தம் செய்து
வாங்கிக்கொண்டு

பப்லோ ரோட்டில் வந்து காய்கறியும் பழங்களும் வாங்கிக்கொண்டு வீடு திரு
ம்பியபோது

கைத்தொலைபேசி ஒலித்தது.

"ஹலோ, நான் குமார் பேசறேன்..." என்ற குரலைக் கேட்டதும் ,
"குமார் இப்போ எங்கே

இருக்கிறீங்க?" என்றார் ராஜா.
"23 ஆம் நம்பர் பஸ்சுல வந்துக்கிட்டிருக்கிறேன், பஸ் இப்போ
ஹைவேயில வந்துக்-

கிட்டிருக்கு...நான் எந்த ஸ்டாப்பில இறங்கணும் அத்தான்?"

"ஹைவே முடிஞ்சு பஸ்
இடதுபுறமாய் திரும்பியதும் மூணாவது நிறுத்தத்துல

இறங்குனீங்கன்னா எதிர்த்தாப்புலதான் எங்க புளோக் இருக்குது... நான்
பஸ் நிறுத்தத்துல

சிகப்பு நிற டி ஷர்ட் போட்டுட்டு நிக்கிறேன்...நீங்க வாங்க..."
என்றவர் வீட்டுக்குள் திரும்பி

'அனிதா, நான் போய் குமாரை அழைச்சிட்டு வந்திடறேன்"
என்று சொல்லிவிட்டு மின்தூக்கி

எடுத்து புளோக்கின் கீழிறங்கினார். அங்கங்கே ஒருவருக்கொருவர் 'கோங் சீ பா சாய்'

சொல்லிக்கொண்ட சீனர்களும் ஆரஞ்சுப் பழங்களோடு நண்பர்களைப் பார்க்கப் பயண-

மாகிக்கொண்டிருந்த குடும்பத்தினரும் எனக் கீழ்த்தளம் முழுவதும் களைகட்டி இருந்தது.

இன்னும் ஒரு வாரம் வரை இப்படித்தான் விழாக்கோலமாக இருக்கும் என்பதை

எண்ணியபடியே இடதுபுற நடைபாதையைக் கடந்து பேருந்து நிறுத்தத்தை அடைந்தவர்

மறுபடியும் ஒருமுறை குமாரின் கைத்தொலைபேசிக்கு அழைத்தார்.

"தம்பி, நான் இப்ப பேருந்து நிறுத்தம் வந்துட்டேன்... நீங்க எந்த இடத்துல வந்துட்-

திருக்கீங்க?"

"இன்னும் ஒரு ஸ்டாப்தான் இருக்கு அத்தான்...அஞ்சு நிமிடத்துல வந்துடுவேன்..."

ஓரிரு நிமிட இடைவெளியில் வந்து நின்ற 23 ஆம் எண் பஸ்ஸிலிருந்து இறங்கியவர்-

களில் ஒரே ஒரு இந்திய இளைஞர் மட்டுமே இறங்கியதால் ராஜாவுக்கு அவரை எளிதில்

அடையாளம் காண முடிந்தது. கையிலிருந்த தமிழக ஜவுளிக்கடையின் விளம்பரப்-

பையும் அவர்தான் குமாராக இருக்க வேண்டுமென்பதை குறிப்புக் காட்டியது.

பேருந்தை விட்டிறங்கிய குமாருக்கு நிறுத்தத்தில் எழுந்து நின்ற சிகப்பு டி ச ட்டைக்

காரரைக்கண்டதும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது; இவர்....இவர் அன்றைக்கு நாம்

மின்தூக்கியில் சந்தித்தவரல்லவா!  அன்று தலைக்கவசத்தோடும் அழுக்குச் சட்டை-

யோடும் இருந்த நம்மை அவருக்கு இப்போது அடையாளம் தெரிய வாய்ப்பில்லை,

ஆனால் தனக்கு அவரை நன்றாகத் தெரிந்தாலும் காட்டிக்கொள்ளலாமா என்றொரு

குழப்பம் மனதில் எழுந்து அடங்கியது.

'வேண்டாம்...இப்போதைக்குக் காட்டிக்கொள்ளவேண்டாம்...அதுபற்றி பிறகு முடிவு

செய்து கொள்ளலாம்' என்று நினைத்தவராக ' வணக்கம் நான் குமார் 'என்றார்.

"நானும் கண்டுபிடிச்சுட்டேன்...எப்படின்னா இப்ப இறங்கனதுலயே நீங்க மட்டும்தானே

என் கலர்லே இருக்கீங்க...அதுனாலே எளிதாக்கண்டு பிடுச்சுட்டேன்..."என்றார்

சிரித்தபடியே ராஜா.

"ஊர்லே எல்லோரும் நல்லா இருக்காங்களா? " என்று கேட்டவாறே வலிந்து ஒரு

பையை தானே வாங்கிக்கொண்டார்.

" எல்லோரும் நல்லா இருக்காங்க அத்தான்... உங்களை நான் நேர்லேயே பார்த்ததே

இல்லை.....உங்க கல்யாணத்தப்பக்கூட
எங்க பாலிடெக்னிக்கில லீவு தராததால உங்க

கல்யாணத்தையே நான் வீடியோவுலதான் பார்த்தேன்... இப்பக்கூட உங்களை

எனக்கு டி சட்டையை வச்சுத்தான் அடையாளம் காண முடிஞ்சுது..."

"நீங்களாவது என்னை வீடியோவுல பார்த்தீங்க...நான் வீடியோவுல இருந்து

உங்களைப் பார்க்க முடியாததால உங்களைப் பார்த்ததே இல்லை"

வாய் விட்டுச் சிரிக்க வேண்டிய ஜோக் இல்லையென்றாலும் மிகவும்

கலகலப்பாக வெளிப்படையாகப் பேசிய ராஜாவைப் பார்த்து "அவரா இவர்" என்ற ஐயம் மேலிட ரசித்துச் சிரித்தபடி பின்தொடர்ந்தார் குமார்.

இருவரும் மின்தூக்கியில் நுழைந்து ஊர் உறவுகளைப் பற்றி ஒருவரிடம் மற்றவர் விசாரித்தபடியே வீட்டையடைந்தபோது அனிதா கதவுக்கு வெளியே நின்றபடியே வாய் நிறையச் சிரிப்போடு "வாங்க தம்பி" என்றார்.

"ஆமாக்கா...நல்லா இருக்கீங்களா?..."

"ம்...இருக்கோம் உள்ளே வாங்க..." ஹாலுக்குள் நுழைந்து மின்விசிறியை ஓடவிட்ட அனிதா, "எப்படி அத்தான் உங்களை கண்டு பிடிச்சார்?...நம்ம சொந்தக்காரங்களையே தெரியாதும்பாரே..." என்றார்.

பார்வையாலேயே முறைத்த கணவர் ராஜாவைப் பார்த்துச் சிரித்தபடியே,

"சரி...சரி முறைக்காதீங்க...ஹாஸ்டல்லயே படிச்சு
முடிச்சுட்டு வேலை கிடைச்சு

சென்னையிலேயே தங்கிட்டதாலே
யாரையும் தெரிஞ்சுக்க முடியாமப் போச்சுன்னு

சொல்ல வந்தேன்" என்றவர் "முகம் கை கழுவிட்டு வாங்க
தம்பி...டிபன் சாப்பிட்டு

அப்புறம் பேசலாம்" என்றபடியே சமையலறைக்குள் போனார் அனிதா.

குமாரின் பார்வை வீடெங்கும் துழாவியது..."எங்கத்தான் மருமகப் பொண்
ணைக்

காணோம்?"

"ஓ...ப்ரீத்தியைக் கேக்கறீங்களா?
அவளுக்கு காலைல ஒன்பது மணிக்கு டான்ஸ்

கிளாஸ் இருக்கு...அதை முடிச்சுட்டு
அப்படியே டியுஷனுக்குப் போயிடுவா...பகல்

2 மணிக்குத்தான் சாப்பாட்டுக்கே வருவா... "என்றார்.

"அப்படியா...மத்தியானம் படம் பார்க்கப் போறதுக்காக ரூம் நண்பர்கள்லாம் எனக்கும்

சேர்த்து டிக்கெட் எடுத்திருக்காங்க...பீஷான் தியேட்டருக்குப் போகணுமே..."

ப்ரீத்தியைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலையோடு பேசுவதைப்போலப்

பேசினார் குமார்.

"அநேகமாக நீங்க போறதுக்குள்ளாகவே வந்துடுவா...இல்லேன்னா என்ன இனிமே

வாரா வாரம் எங்க வீட்டுக்கு வந்துடுங்க...அவளோடப் பேசிப்பேசியே பொழு தைக்

கழிக்கலாம்...வாய் ரொம்ப சுட்டி தெரியுமா!..." என்ற ராஜா "சரி வாங்க டிபன்

சாப்பிட்டுடலாம்..." என்றவாரே டைனிங் ஹாலுக்குப் போனார்.

இட்லி சாம்பாரும் மல்லி மணக்கும் சட்னியும் ஆவி பறக்கும் இட்லியுமாக இரண்டு

வார காலத்துக்குப்பின் வீட்டில் சாப்பிட்டதைப் போல் நாக்குக்கு இதமாக உணர்ந்த குமார்

"நீங்களும் உட்காருங்கக்கா மூணு பேருமே சாப்பிட்டுடலாமே"என்றார்.

"பரவாயில்லே நீங்க சாப்பிடுங்க தம்பி...குக்கரில் இட்லி வேகுது..." என்றவர் "டிபன்

சாப்பிட்டுட்டு ஓய்வெடுங்க...இல்லேன்னா டி.வி பாருங்க...நான் மத்தியான சமையலை

முடிச்சுடறேன்..." என்றார்.

"நான் வேணுமுன்னா சமையல்ல உதவட்டுமாக்கா?"

"பரவாயில்ல தம்பி...இதே மாதிரி உங்கத்தான் கேட்டாவாவது ஏதாச்சும் வேலை

வாங்கலாம்..."என்று ராஜாவைப் பார்க்க,

"உங்க தம்பி கேட்டாருன்னா இன்னைக்கு ஒருநாளோடு போச்சு...நான் கேட்டுட்டு

அகப்பட்டுக்கிட்டா வருஷம் பூராவுமில்ல வசமா மாட்டிக்கிடுவேன்" என்று ராஜா

கலாய்க்க அந்த இடமே கலகலப்பானது.
இப்படி வீட்டுச் சூழல்ல இருப்பது மனதுக்கு

இதமாக  இருந்தது குமாருக்கு.

கிராமத்துச் சூழல்ல பிறந்து, கூட்டுக்குடும்பத்துல வளர்ந்து, கலகலப்பான

வாழ்க்கைக்குப் பழகியிருந்த குமாருக்கு பகல் முழுவதும் கட்டுமானத்தளமே

கதியாகக் கிடப்பதும் இரவில் நண்பர்களோடு மட்டும் பழகிப் பொழுதைப்

போக்குவதும் கொஞ்சம் தனிமையான வாழ்க்கையைப்போல இரண்டு வாரங்களாக

இருந்ததால் இன்றைய பொழுதின் இன்பத்தை வெகுவாக ரசித்தார். ஆனால்

"இத்தனை கலகலப்பாகப் பழகும் அத்தானா அன்றைக்கு அப்படி....?" என்பதை

நினைத்தபோது கொஞ்சம் வியப்பாக இருந்தது.

"மருமகளைத்தான் பார்க்க முடியவில்லை...அவங்க போட்டோ ஆல்பம்

இருந்தா கொடுங்க... பார்த்து பொழுதை ஓட்டுறேன்" என்றார் குமார்.

"அதோ அந்த ஸ்டடியிங் ரூம்ல அவ ஆல்பமெல்லாம் இருக்கு பாருங்க

குமார்..." என்ற ராஜா "பார்த்துட்டிருங்க நான் கீழே கடை வரை போயிட்டு

வந்துடறேன்..."என்றார்.

"சரி அத்தான்" என்றவர் ஸ்டடியிங் ரூமுக்குள்    நுழைந்து ஆல்பங்களைப்

புரட்ட ஆரம்பித்தார்.     பாலர் பள்ளி முதல் இப்போது
வரையிலும் உள்ள பள்ளி

மற்றும் சமூக மன்றப் போட்டிகளில்    பாரதியாராகவும், வள்ளுவராகவும்,    வீர
-

பாண்டிய கட்டபொம்மனாகவும் என வித விதமான   மாறுவேடப்போட்டிகளி
ல்

கலந்துகொண்டு கலக்கிய படங்களையும் கண்ணாடி அறைகளில் அடுக்கி

வைக்கப்பட்டிருந்த நினைவுப் பரிசுகளையும் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்
து

வியந்தபடியே இருந்ததால் நேரம் போனதே தெரியாமல் மணி ஒன்றாகி

இருந்தது.

வெளியே சென்றிருந்த ராஜாவும் "என்ன குமார் மருமகப்பொண்ணு

படங்களைஎல்லாம் பார்த்தாச்சா?" என்றவாறே அறைக்குள் நுழைந்தார்.

"ம்...பார்த்தாச்சு அத்தான்...என்  கண்ணே பட்டுடும் போலிருக்கு ப்ரீத்தி

வந்ததும்  திருஷ்டி சுத்திப் போடுங்க" என்று வெள்ளந்தியாகச் சொன்னார்.

"சும்மாவே உங்க அக்கா வாரா வாரம் சுத்திப் போடுவாங்க... நீங்க வேறே

சொல்லிட்டீங்கள்ல இன்னிக்கு அரைகிலோ சாம்பிராணி
கூடுதலாக வாங்கிட்டு

வர வேண்டியதுதான்..." என்று சிரித்த ராஜாவை முறைத்தபடி வந்த  அனிதா

"சரி கதையெல்லாம் போதும் வாங்க சாப்பிடலாம்..." என்றார்.

ஊரில் சாப்பிடுவதைப்போன்ற சுவையுடன் மீன் குழம்பும் மீன் வறுவலும்

இருந்ததால் நன்றாகச் சுவைத்துச்   சாப்பிட்ட குமார், "கொழம்பு ரொம்ப
நல்லா

இருந்ததுக்கா..." என்றார்.

சாப்பிட்டு முடித்தபோது  மணி இரண்டாகி  இருந்ததால் "அப்ப சரி, நான்

கிளம்புறேன்..." என்ற குமார் " அந்த பையில
பெரியம்மா கொடுத்துவிட்ட எல்லா

பொருளும் இருக்குது அக்கா ... ப்ரீத்தியைத்தான் பார்க்க முடியல...
இன்னொரு

நாள் லீவுல வாரேன் அக்கா..." என்றபடி எழுந்தார்.

"சரி குமார் நல்லபடியா போயிட்டு வாங்க... லீவு கிடைக்கிறப்பவெல்லாம் இது

உங்க வீடுன்னு நினைச்சுக்கிட்டு இங்க வந்துடுங்க..." என்றார் அனிதா. ராஜாவும்

எழுந்து "அநேகமா நாம இப்போ கீழே போறப்பக்கூட ப்ரீத்தி வந்தாலும் வந்துடுவா...

வாங்க போய்ப் பார்ப்போம்..." என்றவாறு உடன் வந்தார்.

அதே தளத்தில் நின்ற மின்தூக்கியை அழுத்திய ராஜா உள்ளே நுழைந்ததும் சில

நாட்களுக்கு முன்னர் தான் சந்தித்த ஊழியரைப் பற்றிய நினைவு வர, "குமார் கொஞ்ச

நாளுக்கு முந்தி இந்த மின்தூக்கியில ஒரு ஊருக்காரப் பையன்கிட்ட நான் மரியாதை

இல்லாம நடந்துக்கிட்டேன்... அன்னைக்கு நான் இருந்த டென்ஷன்ல அவரை ரொம்ப

அலட்சியப்படுத்திட்டோமேன்னு இன்னிக்கு வரைக்கும் நெனைச்சி வருத்தப்படுறேன்..."

என்ற ராஜாவை விநோதமாகப் பார்த்தார் குமார்.

"அப்படியா அத்தான்...கொஞ்ச நேரம் பழகினதுக்குள்ளயே எனக்கு உங்க மேலே

ரொம்ப மரியாதை ஏற்பட்டுப் போச்சுது...அதுனால அந்த பையனும் உங்களைப்

பத்தி தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்க மாட்டார்... நீங்க அந்த சம்பவத்தையே இத்தோட

மறந்துடுங்க...வேணுமின்னா நான்தான் அந்தப் பையன்னு நினைச்சுக்கிடுங்க..அப்ப

உங்க குற்றவுணர்ச்சி எல்லாம் இல்லாமப் போய்விடும்..." என்று ஏதோ பெரிய

ஞானியைப்போலக் குமார் பேசப்பேச ராஜா அவரையே வியப்போடு பார்த்தார்.

பேருந்து நிறுத்தம் செல்லுகிறவரை ப்ரீத்தி வராததால் கொஞ்சம் ஏமாற்றத்தோடு

திரும்புவதாக குமார் காட்டிக்கொண்டாலும் ப்ரீத்தி வராதது நல்லது என்றே அவர் மனம்

நினைத்தது. வந்திருந்தால் ஒருவேளை அவரை அடையாளம் கண்டிருக்கலாம்,

ஏனென்றால் அந்த நாளில் மின்தூக்கியைவிட்டு வெளியேறுகிற வரை அடிக்கடி

அவரைப் பார்த்தபடியே வந்ததால் நிச்சயம் நினைவிலிருக்க வாய்ப்புண்டு.

எனவே பார்க்கமுடியவில்லையே என்று வருந்துவதாய்க் காட்டிக்கொண்டாலும்

கிளம்புகிறவரை வராமலிருக்க வேண்டுமென்றே வேண்டிக்கொண்டிருந்தார்.

திரும்பிச் செல்ல பேருந்து எடுக்க சிராங்கூன் ரோடு வரை நடந்து செல்ல

வேண்டி இருந்ததால் அந்தச் சம்பவத்தைப் பற்றிய பேச்சை மாற்ற நினைத்த குமார்

"வேறென்ன அத்தான் இப்ப ஊருக்குப் போற உத்தேசம் ஏதாவது இருக்கா என்ன?"

என்றார்.

"இது வரை திட்டமிடவில்லை...அநேகமா ப்ரீத்தியோட லீவுல இந்த வருஷம்

போகலாமுன்னு ஒரு திட்டம் இருக்கு" என்றார் ராஜா.

"அப்படீன்னா எங்க வீட்டுக்கும் அப்ப போயிட்டு வாங்க"

"நிச்சயம் போயிட்டு வாரோம்" என்றபடியே இருவரும் பேசிக்கொண்டே

பேருந்து நிறுத்தம் சென்றடைய, சரியாக வந்து நின்ற 23 ஆம் பஸ்ஸில் ஏறிய குமார் ,

"சரி  அத்தான் அப்ப நான் போயிட்டு வர்றேன்" என்றார்.

" ஒ.கே போயிட்டு வாங்க குமார் " என்று கையாட்டிய ராஜா திரும்பி வீடு நோக்கி

நடக்கத் தொடங்கினார்.

பஸ்ஸில் ஏறிய குமார் திரும்பத்திரும்ப ராஜாவைப் பார்த்தபடி தனக்குள் சொல்லிக்-

கொண்டார்..." என்னை மன்னிச்சுடுங்க அத்தான்... ப்ரீத்தி அன்னைக்கு என்னை நல்லா

முகத்துக்கு முகம் பார்த்துக்கிட்டே வந்ததாலே நிச்சயம் என்னை அடையாளம் கண்டு

பிடுச்சுடும்கிறதாலே இப்போதைக்கு பார்க்கக்கூடாதுன்னுதான் நான் படத்துக்குப்-

போறேன்னு பொய் சொன்னேன்... முதல்ல உங்களைப் பார்த்தப்ப என்னை அடையாளம்

காட்டிக்கிடலாமான்னு ஒரு சின்ன சந்தேகம் இருந்துச்சு. ஆனா நீங்க பழகுன விதமும்

என் மீது காட்டுன அன்பும் என்னை இப்படி முடிவெடுக்க வைச்சுது. இவ்வளவு நல்லவரா

இருக்கிற நீங்க அவமானப்படுத்தினது என்னைத்தான்னு தெரிஞ்சா காலம்பூரா இதையே

நெனைச்சி வருத்தப்படுவீங்கன்னுதான் நான் அவன்தான்னு உங்கிட்டக் காட்டிக்கிடலை.

அதனால நான் பொய் சொன்னதுக்காக என்னை மன்னிச்சுடுங்க அத்தான்..."

பேருந்தின் கண்ணாடி வழியே பார்வையைவிட்டு ராஜா மறையும் வரை தனக்குத்தானே

சொல்லிக்கொண்டார் குமார்.

********************************************************************************
***********************************************